79

80 காசு

செப்' 87

மாத இதழ்




FREE E - BOOKS , www.thamizham.net.,

ஒட்டுச் சீட்டும் தபால் தலையும்
ஒன்றுதான்.
இரண்டுமே
முத்திரை குத்தப்பட்ட பின்னால்
செல்லாமற் போகின்றன.

இந்திய வாழ்க்கைத் தரம்
உயர்ந்தது
கதரில் இருந்த தேசிய கொடி
பட்டில் பறந்தது!

## கவிதைகள்

லாட்டரிச் சீட்டின்
தொண்டைப் பாராட்டுகிறேன்.
முன்பெல்லாம் —
படிக்கிறவர்கள் மட்டுந்தான்
ரிஸல்ட் பார்ப்பார்கள்

மந்திரிகளும் கோப்புகளும்
வேறு வேறு சாதிகள் :
அதனால்தான் அங்கு
தீண்டாமை அனுஷ்டிக்கப்படுகிறது.

காற்றில் மூழ்கி
மூச்சடைத்து இறந்தது —
மீன்.

நா. தென்னிலவன்.

---

சுடர்

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை—600040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

திருப்பதி வெங்கடாசலபதி ரூ. 100 பில்லியன் (ரூ. 100,000 கோடி) சொத்துக்கும் 2 கோடி ரூபாய் பெறுமானமுள்ள நகைகளுக்கும் அதிபதி. இவரது வருமானத்தில் பெரும் பகுதி பக்தர்கள் உண்டியலில் போடும் காணிக்கையே.

திருப்பதி உண்டியல் ஒரு பெரிய கான்வாஸ் பைதான். சராசரி நாளொன்றுக்கு ரூ. 2 லட்சம் இந்த உண்டியலில் சேருகிறது. அதுவும் புத்தாண்டுதினம் போன்ற விசேஷ தினங்களில் உண்டியல் தொகை ரூ 5 லட்சத்தையும் தாண்டி விடுகிறது. இப்படி ஒரு வருடத்தில் கிடைக்கும் உண்டியல் தொகை மட்டும் 15 கோடி முதல் 20 கோடி ரூபாய்கள்.

இந்த உண்டியலைக் கண்காணிக்க ஊழியர்களை திருமலை திருப்பதி தேவஸ்தானம் நியமித்துள்ளது. இவர்கள் மணிக்கொருவராக உண்டியலைக் காவல் காக்கின்றனர். 1976-ம் ஆண்டு இப்படி காவல் காத்திருந்த ஒருவரே பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை. உண்டியலிருந்து எடுத்துக் கொண்டு ஓடிவிட்டார்.

## திருப்பதி உண்டியல்

இந்த உண்டியலில் சேரும் தானியங்கள், தங்க வெள்ளி நகைகள், கடிகாரங்கள், பேனாக்கள், பாத்திரங்கள், சிகரெட், பீடி பாக்கெட்டுகள் இவையெல்லாம் ஏலத்தில் விடப்பட்டு அந்தத் தொகையும் கோயில் நிதியில் சேருகிறது.

திருப்பதி மலை முழுவதுமே திருத்தலமாகக் கருதப்படுவதால் அங்கங்குள்ள கோயில்களிலும் மக்கள் காணிக்கை செலுத்துகின்றனர். அதை தேவஸ்தான ஊழியர்கள் சேகரித்து வங்கியில் கோயில் நிதியில் சேர்த்து விடுகின்றனர்.

1933-ல் ரூ. 11 லட்சமாக இருந்த திருப்பதியின் வருமானம் இப்போது ரூ 20 கோடியாக உயர்ந்துள்ளது. கடந்த 45 வருடங்களில் 150 மடங்கு இதன் வருமானம் பெருகியுள்ளது. இதில் உண்டியல் வருமானம் மட்டுமே 6 மடங்கு உயர்ந்துள்ளது.

நன்றி : கேரவன் — நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

## 40வது சுதந்திர தினம்

❊ டெல்லி செங்கோட்டையில் குண்டு துளைக்காத கண்ணாடி கூண்டிலிருந்து கொடியேற்றிய ராஜீவ், "மதசார்பற்ற கட்டுக் கோப்பைக் குலைக்க முனைந்துள்ள வகுப்புவாத சக்திகளை ஒடுக்குவேன்" என்றார்.

❊ வன்முறை நடவடிக்கைகளில் பயங்கரவாதிகள் ஈடுபடக்கூடும் என்பதால் சுதந்திர தின விழாவிற்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. போலீசார் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

❊ பஞ்சாப் லங்கன் காலன் கிராமத்தில் பஞ்சாயத்துத் தலைவர் ஒருவரையும், அவரது மனைவி மற்றும் 2 மகன்களையும் பயங்கரவாதிகள் சுட்டுக் கொன்றனர்.

❊ ஹைத்ராபாத்தில் சுகுணம்மா என்கிற 17 வயது பெண், சுதந்திர போராட்ட வீரர் என்று கூறிக்கொண்டு பொய் சான்றிதழைக் காட்டி ஒய்வூதியம் பெற்று வந்தார். அவர் கைது செய்யப்பட்டார்.

❊ இந்தியா முழுவதும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் 'சிறையை நிரப்பும் கிளர்ச்சி'யில் ஈடுபட்டு போராட்டத்தை தீவிரமாக்கத் திட்டமிட்டனர்.

❊ தம்முடைய மனைவியை 50 ஆயிரம் வரதட்சணை கேட்டு துன்புறுத்தியதாக பேராசிரியர் ஒருவரை போலீஸார் பெங்களூரில் கைது செய்தனர்.

❊ துணி பெல்ட்டில் 12 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கக் கட்டிகளை கடத்தியதாக சண்முகம் (வயது 20) என்பவரை சென்னை சுங்க இலாகா அதிகாரிகள் கைது செய்தனர்.

❊ 40 வது சுதந்திர தின விழாவை குறிக்கும் வகையில் காந்தி சமாதிக்கு அருகில் 'சுதந்திர மரக் கன்று' ஒன்றை ராஷ்ட்ரபதி ஆர், வி. நட்டார்.

❊ எம். ஜி. ஆர். அமெரிக்காவில் இருப்பதால் நெடுஞ்செழியன் தலைமை செயலகத்தில் தேசிய கொடியை ஏற்றி, எம். ஜி. ஆர். ராஜீவ் இவர்களின் நல்லாட்சியால் நாடு அமைதியாக இருப்பதாகச் சொன்னார். நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# மரம் வளர்ப்போம்

''நம் நாட்டில் சரியாக மழை பெய்யவில்லை. காரணம் நாம் எல்லா மரங்களையும் அழித்துக் கொண்டே வருகிறோம். அவை வளர்ந்து செழித்தால்தான் நாடு செழிக்கும். மழை நேரங்களில் வளரும் புதர்களையும் செடிகளையும் கூட அழிக்கக் கூடாது......''

—பிரதம மந்திரி பேசிய பேச்சு எல்லா மக்களையும் நிமிர்ந்து கேட்கச் செய்தது. நாட்டின் மீது எவ்வளவு அக்கறை?

*     *     *

அதிகாலை அந்த குடிசைப் பகுதியில் டாப்பாக்களை கையில் தூக்கி சென்ற இரு இளைஞர்களுக்கு பெருத்த ஏமாற்றம். வெயிலுக்கு ஒதுங்க இடமில்லை. எதிர்ப்பட்டவர்களிடம்......

''ஏம்பா இந்த ஹைவேயிலே இரண்டு புறமும் நின்ற ஆமணக்கு செடிகளில் ஒன்றைக் கூட காணலையே...''

''எல்லாத்தையும் வெட்டிட்டானுவோ காரணம் நேத்து நம்ம பிரதம மந்திரி இந்த ரோட்டு வழியேதானே வந்தாரு......''

---

குறிப்பு: அண்மையில் பிரதமர் பம்பாய் வந்தபோது சயான்—பாந்திரா ஹைவேயில் தராவிப் பக்கம் சாலையின் இருபுறமும் வளர்ந்து அடர்ந்த ஆமணக்குச் செடிகளை பாதுகாப்புக்காக அழித்து விட்டனர். —அம்பை ஆதவன்

---


## வேல் டைப்பௌண்டரி

● புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
○ எல்லா மொழி அச்செழுத்துக்கள்
❊ எல்லாவித அச்சக உபகரணங்கள்
★ போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,

# முரண்பாடுகளின் மூட்டை

ஜெயகாந்தன் ஓர் அற்புதமான கலைஞன். அவர் ஒரு ஆற்றல் மிக்க அறிவுஜீவி.

ஆனால் அவர் ஒரு குழப்பமான அரசியல் வாதி.

இந்தி பற்றி அவர் சமீப காலங்களில் கொண்டிருக்கும் கருத்துக்கும் ஜனதா ஆட்சிக் காலத்தில் அவர் கொண்டிருந்த கருத்துக்கும் பலத்த வேறுபாடு உண்டு.

ராஜராஜ சோழன் பரிசை பெற்றுக் கொண்டு தமிழ்ப் பல்கலைக் கழக முற்றத்தில் தமிழர்களே! 'இந்தி படியுங்கள்' என்று முழங்கிய ஜெயகாந்தன் அவர்களே!

1980-இல் நீங்கள் இதயம் பேசுகிறது இதழில் வெளியிட்ட வாக்கு மூலத்தை மீண்டும் படிக்கிறீர்களா?

''வாளையும் வன்முறையையும் விட, கொடுமை மிகுந்த ஒரு கோழையின் ஆயுதமாகச் சட்டத்தை மாற்றும் முயற்சியில் இந்த ஜன நாயகம் இறங்குகிறது. அந்த ஆயுதத்தின் துணை கொண்டு அதாவது சட்டங்களை நிறை வேற்றி சட்டம் சார்ந்து வாழ்கிற குடிமக்களின் தலையில் ஒரு ஜனநாயக நிர்பந்தமாக ஒற்று மையின் பேரால் இந்தியாவுக்கு ஒரு மொழி வேண்டும் அது பெரும்பான்மையினரால் பேசப்படுகிற இந்தியாக இருத்தல் வேண்டும் என்று எண்ணுவது இந்தி மொழிக்கு அவலமான விளைவுகளையே உண்டாக்கும். ஒரு மொழியை இப்படி எல்லாம் பரப்ப வேண்டும் என்று உண்மையில் அந்த மொழி சார்ந்தவர்கள் நினைப்பதில்லை. மொழி சம்பந்தமில்லாத வேறு வித மூலதன மூடர்க ளின் சிந்தனையே அதுவாகும்.''

கலைஞன் என்பவன் சமூகத்தின் மன சாட்சி என்பதைத் தாங்கள் அறியாதவரல்ல.

அடிக்கடி வாக்குமூலத்தை மாற்றிக் கொள் பவன் பொய் சாட்சி அல்லவோ?

— பிருந்தா சாரதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## திருப்பதி லட்டு

திருப்பதியின் பிரதான பிரசாதம் 200 கிராம் எடையுள்ள லட்டு ஒன்றின் விலை ரூ. 3. 60 சமையல்காரர்கள் இரவும் பகலுமாக லட்டு மற்றும் பொங்கல், சித்ரான்னம் புளியோதரை, தயிர்சாதம் முதலியற்றைத் தயாரிக்கின்றனர். மேற்கண்ட உணவுப் பதார்த்தங்களைத் தயாரிக்க வருடந் தோறும் 1 கோடி ரூபாய்க்கு நெய், ரூ. 40 லட்சத்துக்கு பாதாம் பருப்பு மற்றும் உலர்ந்த பழவகைகள், ரூ. 25 லட்சத்துக்கு அரிசி, ரூ. 15 லட்சத்துக்கு சர்க்கரை ஆகியவை செலவழிக்கப்படுகின்றன.

இங்குள்ள சமையலறையில் 120 ஊழியர்கள் ரூ. 850 மாத ஊதியத்துடன் நியமிக்கப்பட்டுள்ளதாக தேவஸ்தானம் கூறுகிறது. ஆனால் உண்மையில் ரூ. 400 மாத ஊதியம் பெறும் 60 ஊழியர்களே பணிபுரிவதாகத் தெரிகிறது.

80 லட்டுகள் மட்டுமே செய்யக்கூடிய பொருட்களிலிருந்து தற்போது 100 லட்டுகள் தயாரிக்கப்பட்டு லட்டின் அளவு சிறுத்து விட்டது. தற்போது நாளொன்றுக்கு 50, 000 லட்டுகள் விற்பனையாகின்றன. இதனால் ரூ. 30, 000 அதிகப்படி வரவு கிடைக்கிறது.

உலகிலேயே உணவுப் பண்டங்களை விற்கும் ஒரே வங்கி திருப்பதி வைஸ்யா வங்கிதான்!

இங்கு தயாராகும் லட்டும் பரிசுத்தமானது அல்ல. பலமுறை லட்டுகளில் நகங்களும் பிற அசுத்தங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

தங்கச் சுரங்கம் என்னுமளவுக்கு பிரசாத விற்பனை இக்கோயில் வருமானத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதனால் பிரசாத உற்பத்தியை அதிகரிக்க காஸ் அடுப்பு மற்றும் நவீன சாதனங்கள் பயன்படுத்தப் படுகின்றன. ஆனால் இந்த அடுப்புகளின் முன் வியர்வை சொட்டச் சொட்ட உழைக்கும் ஊழியர்கள் பெரும் பாலோருக்கு அன்றாடக் கூலியே தரப்படுகிறது. ஒரு சிலரே குறைந்த அளவு மாதச் சம்பளம் பெறுகின்றனர்.

நன்றி : கேரவன் —நிலா

FREE E - BOOKS , www.thamizham.net.,

## எச்சரிக்கை

பத்திரிகையாளர்களை அவமானப் படுத்தும் காட்சி ஒன்று கமலஹாசனின் சொந்தப் படத்தில் (கடமை கண்ணியம் கட்டுப்பாடு) வருகிறது. நடிகர் சத்தியராஜ் பத்திரிகையாளர் ஒருவரை செருப்பால் அடிப்பது போல் வருகிறது. "ஏதாவது ஒன்று நடந்து விட்டால பத்திரிகை காரங்ககூட்டமா கூடிடுறானுவோ" என்று ஒரு இன்ஸ்பெக்டர் வசனம் வேறு இந்தப் படத்தில் பேசுகிறார்.

கமலை எழுதி எழுதி உச்சாணிக் கொம்பில் ஏற்றி வைத்து விட்டு கீழேயே இருக்கும் பத்திரிகையாளர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்கள் அப்படத்தின் பிரத்யேகக் காட்சியில்ள திர்ப்பு இருந்ததா? இல்லை. அன்றைக்கு உப்புப் போட்டு சாப்பிடாமல் காட்சிக்குப் போனார்களோ பத்திரிகையாளர்கள்......?

40 சதவீதத்திற்கு மேல் படிப்பறிவு இல்லாதவர்கள் மிகுந்த நாட்டில் தன்னை அறிவு ஜீவியாக காட்டிக் கொள்வார் கமலஹாசன். இந்தப் படம் மாற்றுமொழி தழுவல். மூல மொழியில் இது போன்ற காட்சி இல்லை. தமிழுக்காக பத்திரிகையாளர்களை அவமானப் படுத்தும் காட்சி திணிக்கப்பட்டுள்ளது.

சிவாஜி கணேசன் டாக்டர் பட்டம் பெற்றபோது முதன் முதலில் பாராட்டுவிழா நடத்தியது பத்திரிகையாளர்களே. "திரையுலகில் நான் கால் ஊன்ற காரணமானவர்கள் பத்திரிகையாளர்களே!" என்று சிவாஜி பேசினார். எம். ஜி. ஆர். உட்பட யாரும் பத்திரிகைகளை, பத்திரிகையாளர்களை குறைத்து தன் படங்களில் காட்டியதில்லை. படத்தில் சம்பந்தப் பட்டவர்கள் அனைவரும் இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும்.


எச்சரிக்கை: அமிதாபச்சன் தம்பி விவகாரத்தை கிளறியதே ஒரு பத்திரிகைதான் அதற்காக எம். பி. பதவியை ராஜினமா செய்தார் அமிதாப். இன்று வடநாட்டில் அவரது உச்சப் புகழ் மங்கி வருகிறது. அவரை செல்லா காசாக்கியது பத்திரிகைகளே!

— ரவுஸ் பாரத்

FREE E - BOOKS , www.thamizham.net.,

? வெளிநாட்டுத் திரைப் படங்கள் இந்தியாவிற்கு எவ்விதம் வருகின்றன?

அறந்தை மணியன் : திரைப் பட இறக்குமதியை மூன்று முக்கிய பகுதிகளாகப் பிரிக்கலாம். 1. அமெரிக்கா, இங்கிலாந்து, ரஷ்ய, நாட்டுப் படங்களின் இறக்குமதி. 2. தேசிய திரைப் பட வளர்ச்சிக் கழகம் (NFDC) தோன்றியபின் அதன் மூலம் பல் வேறு நாட்டுமக்களின் இறக்கு மதி. 3. வெளிநாட்டில் வசிக்கும் இந்தியர்கள் நமது நாட்டிற்கு இறக்குமதி செய்யும் படங்கள் (Films Imported by Non-Resident Indians)



பொதுவாக நமது நாட்டிற்குள் வரும் படங்களில் பெரும்பான்மையானவை அமெரிக்கப் படங்களே!

? சமூகம் என்றால் என்ன?

தாகூர் : மனிதன் பாதங்களால் நடக்கும்போது பயணம் என்கிறோம். உயிரால் நடக்கும்போது வாழ்வு என்கிறோம். கூட்டமாக நடக்கும் போது சமூகம் என்கிறோம்.

? தேசம் (NATION) என்றால்....

ஸ்டாலின் : தங்களுக்கென, பொதுவான மொழி, பொதுவாக வரையறுக்கப்பட்ட நாட்டெல்லை, பொதுவான பொருளாதார வாழ்க்கை, பொதுவான கலாச்சாரத்தில் வெளிப்படும் பொதுவான உளவியல் உருவாக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாகி வரலாற்றுப் போக்கில் பரிணமித்த ஒரு மக்கட் சமுதாயத்தை தேசம்—தேசிய இனம் என்கிறோம்.

---

★ சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

**சோதிடந்தனை இகழ்** —பாரதி

ஆகஸ்ட் 14-15 நள்ளிரவுக்கு முன் இந்தியா சுதந்திரம் பெற்றால் கேடு விளையும் என்றனர் சோதிடர்கள். ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதிகள் உட்பட அனைத்து அரசியல்வாதிகளும் சோதிடர்களின் கூற்றுக்கு தலைவணங்கினர். ஆகஸ்ட் 15ஆம் நாள் உண்மையிலேயே சோதிடர்களால் தீர்மானிக்கப்பட்டது.

தமது அரசியலில் சோதிடத்திற்கு முதன்மையான இடமளித்தவர் இந்திரா காந்தி. சோதிடர்களை ஆலோசிக்காமல் தேர்தல்கள் இவர் காலத்தில் நடைபெற்றதேயில்லை.

பீகார் முதல்வராயிருந்த திருL.N. மிஸ்ரா 1983ல் நடந்த பாட்னா இடைத்தேர்தலுக்கு முன் தினம் சோதிடரின் கூற்றுப்படி தனது மனைவியை காணவே மறுத்துவிட்டார்.

25 வருடங்களுக்கு முன் புதுடெல்லியில் நான்கில் ஒரு பங்கு எம். பிக்கள் சோதிடர்களால் மந்திரிக்கப்பட்ட மோதிரங்களை அணிந்திருந்தனர். இப்போதும் 75 சதவீத எம். பிக்கள் சோதிடர் தரும் மோதிரங்களை அணிகின்றனர்.

பெங்களூரில் இயங்கிவரும் இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் சயன்ஸ் சோதிடத்தால் முழுமையாக ஆளப்பட்டு வருகிறது. அதி நவீன விஞ்ஞானக் கருவிகளுக்கு மஞ்சள் தடவி, குங்குமம் வைத்து குறிப்பிட்ட நல்ல நாளில் அபிஷேகம் செய்யப்படுகிறது.

1950 ம் ஆண்டு ஜனவரி மாதம் 26ஆம் நாளை குடியரசு நாளாக நேரு தேர்ந்தெடுத்து ஏற்பாடுகளை செய்து வந்தார். அப்போது ஜனாதிபதி திரு. ராஜேந்திர பிரசாத் சோதிடப்படி இந்த நாள் நன்றாயில்லை என்றார். வேறு நாளுக்கு மாற்றச் சொல்லி வலியுறுத்தினார். அதற்கு நேரு, "சோதிடத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. சோதிடர்களின் கட்டளைப்படி அரசாங்க நிகழ்ச்சிகளை நான் நடத்தப் போவதில்லை" என்றார்.

— ரேவதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வெறிநாய்க்கடி

ஜேம்ஸ் மேய்ஸ்டர் — உலகிலேயே முதன் முதலாக வெறிநாய்க்கடியிலிருந்து தப்பியவன். 14 முறை இவனை வெறிநாய் கடித்தது. 9 மாத சிறுவனான இவன் ஒரு மாதத்தில் இறந்து விடுவான் என்று அனைவரும் நம்பினார்கள்.

லூயி பாஸ்டர் — குழந்தைகளின் நோய்த் தடுப்பூசி மருந்து கண்டுபிடித்த மேதை. இவரிடம் ஜேம்ஸைக் கொண்டு வந்தனர். பாஸ்டர் அந்த சமயத்தில் வெறிநாய்க்கடி மருந்து தயாரித்திருந்தார். ஆனால் அவர் அந்த மருந்தை யாருக்கும் செலுத்திப் பார்த்ததில்லை. பாஸ்டர் ஜேம்ஸுக்கு அம் மருந்தை செலுத்திப் பார்த்தார் — ஊசி மூலமாக.

ஜேம்ஸ் குணமாகி விட்டான். சாவை ஜெயித்த அவன் தன் நன்றியைக் காட்ட பாஸ்டர் பாரிஸில் தொடங்கிய 'பாஸ்டர் இன்ஸ்டிடியூட்'டின் வாயில் காப்போனாக தன் வாழ்நாள் முழுவதும் பணிபுரிந்தான்.

உலகிலேயே முதன்முதலில் வெறிநாய்க்கடிக்கு தப்பியவன் என்ற பெருமையோடு 1940-ல் இறந்தான். எப்படி?

நாஜி துருப்புக்கள் பாரிஸில் நுழைந்த போது மனம் நொந்து தற்கொலை செய்து கொண்டு இறந்தான்.

— நிலா

வில்லங்கமில்லாத வீட்டு மனைகள், வீடுகள்
ரூ. 5,000/- முதல் ரூ. 50,000/- வரை
பெற தொடர்புக்கு:

**அமர் ரியல் எஸ்டேட்ஸ்**
21, கஸ்தூரிபாய் நகர் 2 வது
மெயின் ரோடு
அடையாறு, சென்னை-600 020

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வீடிழந்தோர் - அடைக்கலத்தின் அகதிகள் பட்டியல்

உலகில் 10 மில்லியன் மக்களுக்குமேல் அகதிகள் ஐ. நா. தகவல்படி

| நாடுகள் | அகதிகள் எண்ணிக்கை | அடைக்கலம் தரும் நாடுகள் |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 3,485,800 | பாக்கிஸ்தான், ஈரான் |
| பாலஸ்தீனம் | 2,093,500 | ஜோர்டான், Gaza strip, west Bank, லெபனுன், சிரியா. |
| எத்தியோப்பியா | 1,286,500 | சூடான், சோமாலியா, Djibouti, எகிப்து. |
| அங்கோலா | 358,000 | ஜெய்ர், ஜாம்பியா, நமீபியா. |
| கம்போடியா | 283,800 | தாய்லாந்து, வியட்நாம். |

FREE E - BOOKS , www.thamizham.net.,

| | | |
|---|---|---|
| உகண்டா | 282,100 | சூடான், ஜெய்ர், கென்யா, தான்ஜானியா, **Rwanda.** |
| எல்சால்வடார் | 251,700 | மெக்சிகோ, கவுதமாலா, **Honduras,** நிகரகுவா, **Belize, Costa Rica.** |
| மொசாம்பிக் | 219,100 | தென்ஆப்பிரிக்க குடியரசு, ஜாம்பியா, **Swaizland.** |
| **Rwanda** | 187,100 | உகாண்டா, **Burundi,** ஜெய்ர், கென்யா |
| **Chad** | 176,300 | சூடான், மத்திய ஆப்பிரிக்க குடியரசு, கெமரூன், நைஜீரியா. |
| மேற்குசகாரா | 165,000 | அல்ஜீரியா. |
| **Burundi** | 163,500 | தான்ஜானியா, **Rwanda,** ஜெய்ர். |
| ஈரான் | 121,200 | ஈராக், பாக்கீஸ்தான், இந்தியா. |
| லாவோஸ் | 95,300 | தாய்லாந்து, பிலிபைன்ஸ். |
| பிலிபைன்ஸ் | 90,000 | மலேசியா. |

★ பம்பாய் புதியவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

**அ**
**ரு**
**ண்**
**நே**
**ரு**

இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டு அவர் உடலை பார்க்க ஜனாதிபதி ஜெயில் சிங் வரும்போதே, விமான நிலையத்தில் ராஜீவை பிரதமராக்கும் காகிதத்தில் கையெழுத்திட வேண்டும் என்று கண்டிப்பாக கூறினார் அருண் நேரு கையெழுத்துப் போடவில்லையென்றால் ராஷ்டபதி பவன் எரிவதை தடுக்க முடியாது என்று மிரட்டினார். விளைவு: ராஜீவ் பிரதமரான பின் அருண்நேருவுக்கு தரப்பட்ட பதவி எரிபொருள் அமைச்சர்.

யார் இந்த அருண் நேரு...? ராஜீவுக்கும் அருண் நேருவுக்கும் முப்பாட்டனார் ஒருவரே. (கங்காதர் நேரு) எனவே ராஜீவுக்கு உறவினர். இந்திராவே தனது ரெபரேலி தொகுதியில் ஒரு முறை நிற்க வைத்தார். பிறகு சஞ்சய் இறந்த பின் ராஜீவுக்கு துணையாக இருந்து அரசியல் பாடம் கற்பித்தார். ஆசிய விளையாட்டுகளின் போது 300 கோடி ரூபாய் பெறுமான ஹோட்டல்களைக் கட்டுவதில் ராஜீவுக்கு நிர்வாக பங்குதாரராக இருந்தார். N. T. ராமராவை கவிழ்க்க பாஸ்கரராவை உருவாக்கியது இவர் தான். 1984-ல் நடந்த தேர்தலின் போது பெரும்பாலான காங். எம். பிக்களுக்கு தேர்தல் டிக்கெட் கொடுத்துஇவர் தான். இவரது ஆதரவு எம். பிக்கள் 150 பேர்களாவது இருக்கலாமாம்.

இவர் மீது ஊழல் குற்றசாட்டுகளும் உண்டு. 5 கோடிக்கு இவர் வாங்கிய துப்பாக்கிகள் பயனற்றவை. உலக டெண்டர் கொடுக்க வேண்டிய ஒரு விவகாரத்தில் ஒரு குறிப்பிட்ட அயல் நாட்டு கம்பெனிக்கு சலுகைக் காட்டினாராம். இவை யாவும் பெரிய விளைவுகளை ஏற்படுத்தப் போவதில்லை.

'வி. பி. சிங்கிற்கு உதவுகிறார். உத்திர பிரதேசத்தில் குழப்பங்களை ஏற்படுத்துகிறார்' என்று காங்கிரஸ் இவருக்கு கல்தா கொடுத்துள்ளது. இதனால் ராஜீவ் வயதாகும் இவரது செல்வாக்கு அதிகரித்து விட்டது. இன்றைய அரசியல் சூழ்நிலையில் ராஜீவுக்கு மாற்றாக வி. பி. சிங்கும் அருண் நேருவும் முன்னணியில் இருக்கிறார்கள்.

— டி. ராஜசேகர்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஆசிரியர்கள் போராட்டம்

1974 —ல் ரயில்வே ஊழியர்களின் வேலை நிறுத்தத்தை அடுத்து, நாடு தழுவிய அளவில் நடத்தப்படுகிற காலவரையற்ற வேலை நிறுத்தம் கல்லூரி ஆசிரியர்களுடையதுதான். உலகத்திலேயே ஆசிரியர்கள் நடத்துகிற மிகப் பெரிய போராட்டம். இந்திய அளவில் 2 இலட்சத்து 30 ஆயிரம் ஆசிரியர்கள், 6000 கல்லூரிகள், சுமார் 150 பல்கலைக்கழகங்கள் இப்போராட்டத்தில் பங்கேற்கின்றன. தமிழகத்தில் மட்டும் 16,000 ஆசிரியர்கள்.

14 வருடங்களாக ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை. U. G. C. சிபாரிசின்படி ரூ 600 லிருந்து 1500 வரை சம்பள உயர்வு தரலாம் என்று மத்திய அரசு அறிவித்துவிட்டது. இதில் மத்திய அரசு 80 சதவீதம், மாநில சர்க்கார் 20 சதவீதம் தரவேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. இந்த சம்பள உயர்வு 1-1-86 லிருந்து அமல் செய்யப்பட வேண்டும்.

நம் தமிழகத்தில் மட்டும் இந்தப்போராட்டத்தை முறியடிக்க அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது. உண்ணாவிரதம் இருப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்படுகிறது. இதற்கு கோர்ட்டுக்குப்போய் அனுமதி வாங்க வேண்டியிருக்கிறது. தமிழ் நாடு 16000 ஆசிரியர்களுக்கு 7 கோடி ஒதுக்கியுள்ளதாக கூறுகிறது. அரசு கணக்கைப் பார்த்தால் ரூ. 300 கூட சம்பளம் உயராது. இப்படி பொய் வாக்குறுதி மோசடியையும் தமிழக அரசு செய்கிறது.

இப்படிப்பட்ட போராட்டங்களை வளர்த்ததன் மூலம் நாடுதழுவிய ஆசிரியர்களின் ஒற்றுமையையும், போர்க்குணம் மேம்பாடு அடையும் சூழ்நிலையையும் அரசு வலுப்படுத்தியுள்ளது, எனவே, இன்றைய ஆசிரியர்கள் போராட்டத்தின் வலுவான பக்கத்தைப் பார்க்கும்போது வெற்றி பெறாமல் திரும்பமாட்டார்கள் என்றே தோன்றுகிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இனம்

இனம் என்ற சொல் தெளிவற்ற முறையில் பல பொருள்களில் கையாளப்படுகிறது. மொழியை அடிப்படையாக வைத்துத் தமிழினம், ஆங்கில இனம், என்று அழைக்கிறோம். பொதுவாக வரலாறு, மரபு, பொதுமொழி, மதம், பொதுவான சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்கள் ஆகியவற்றினால் ஒன்றுபட்டுச் செயல்படும் மக்கள் கூட்டத்தினரையும் இனம் என்று குறிப்பர். கிரேக்க இனம், ஐரோப்பிய இனம் என்று வழங்கும் பெயரும் இதே அடிப்படையில் வழங்குவன.

மொழி, மதம், பழக்க வழக்கம் இவற்றால் வேறு பட்டிருந்தாலும், அரசியல் காரணமாக ஒன்று பட்டிருக்கும் மக்களையும் இனம் என்று அழைப்பர். இந்திய இனம், உருசிய இனம், என்பன இப்படிபட்டவையே.

**க.ப. அறவாணன்**

மேற்கண்டவாறு இனம் என்பதை அடையாளம் காட்டி அழைப்பதும், பிரிப்பதும் மானுடவியல் பார்வையில் சரியானவை அல்ல. இனம் (Race) என்ற சொல் உடலியலையொட்டி இடப்பட்ட ஒரு பெயரீடாகும்.

சிலர்தோல் நிறத்தைக்கொண்டே இனத்தைத் தீர்மானிப்பர். சான்று: வெள்ளையர் இனம், கறுப்பர் இனம், பழுப்பு நிறத்தாரினம் என்பன. ஒன்றிரண்டு உடற்கூறுகளை மட்டுமில்லாமல் இவ்வாறு வைத்து இனத்தை வரையறைப்படுத்தாமல் உயிரினப் பாரம்மரியத்தின் மூலம், வழிவழியாகக் கொண்டு செல்லப்படக் கூடிய, பொதுவான கண்டறியப்பட்ட உடற் கூற்றுப் பண்புகளை உடைய மனிதர்களின் சேர்க்கையை இனம் என்று குறித்தல் மானுட இயல் பார்வையில் மிகப் பொருத்த மாகும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

கவியரசாக முயலுங்கள். கண்ணதாசனாக வேண்டாம். கண்ணதாசனாக முயன்றால் நீங்கள் எதற்கு? என்று வைரமுத்துவை நோக்கி கேட்கப்பட்ட கேள்வி சம்மட்டி அடித்தது போலிருந்தது.

— எஸ். வி. ஆர். சென்னை-5

மாம்பழம் பற்றிய செய்திகளும் இனித்தது. மாம்பழத்தின் பிறப்பிடம் இந்தியாதான் என்பதை இப்போதுதான் தெரிந்து கொண்டேன்.

—ராஜேந்தர் பிரியன், உறையூர் 620003

'தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு எனக்கு அளிக்கப்படுமானால் அதை அவர்கள் முகத்திலேயே விட்டெறிவேன்' சுந்தரராமசாமியின் துணிச்சல் கண்டு வியந்தேன்.

எஸ். ஜே. இதயா, மதுரை-20

எம். ஜி. ஆரும் வியாதிகளும் கட்டுரை மக்களின் அனுதாப உணர்வின் மூலம் ஆட்சி நடத்துவோர் நிலையை நன்கு எடுத்துக் காட்டியது.

—எம். சம்பத், வேலாயுதம் பாளையம்-639117

# வாசகர் எதிரொலி

பெரிய எழுத்தில் வெளியிட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டதை நனவாக்கி விட்டீர்கள். நன்றி! சுகாதாரம், இவர்கள் தமிழர்கள் கட்டுரை சிறப்பாக இருந்தது.

—எஸ். பி. ராமலிங்கம், பூதப்பாடி-638317

'ஊருக்கு ஒருமுகம்' ராஜீவை சிறப்பாக அடையாளம் காட்டியது.

—எஸ். மூர்த்தி மதுரை-1

டி. ராஜேந்தரின் சாதனை பட்டியல் நீளும். ஒருவர் வளர்ச்சியடைந்தால் மற்றவர்களுக்குப் பிடிக்காது. அந்த விஷயத்தில் T.R.-ன் வளர்ச்சி உங்களுக்குப் பொறாமையாக இருக்கிறது.

—ஷோபன் பாலு, K. K. நகர், சென்னை

FREE E - BOOKS , www.thamizham.net.,

## கொத்தடிமை என்றால் என்ன ?

ஒரு நபர் மற்றொருவருக்காக குறிப்பிட்ட காலத்திற்கு அல்லது காலவரையின்றி கூலி எதுவுமின்றி (அல்லது) அவர்களிடையே முன்பு ஏற்பட்ட வாய் மூலமான அல்லது எழுத்து மூலமான ஒப்பந்தத்தை நிறைவேற்ற ரொக்க மாக அல்லது வேறு வகையில் பெற்றுக் கொண்ட முன் பணத்திற்கு மாற்றாக பெயரளவுக் கூலிக்கு உழைக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டால் கொத்தடிமை என்று அதற்குப் பெயர்.

இந்த முறையில் அடங்கியவை:

★ முழுமையாக அல்லது பெயரளவுக் கூலிக்கு வேலை வாங்குவது.

★ கூலி இல்லாமல் அல்லது பெயரளவுக் கூலிக்கு வேலை செய்வது.

★ ஒரு குறிப்பிட்ட சாதி அல்லது சமூகத்தில் பிறந்துவிட்ட காரணத்தினால், வேலை செய்ய வேண்டுமென்ற கடமை. ★

### வருந்துகிறோம்

சுட்டியின் தொடக்கக் காலங்களில், தனது இதழியல் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, சுட்டியின் வளர்ச்சிக்குப் பேருதவி புரிந்த திரு. கே. ஆர். வாசுதேவன் (முன்னாள் ஆசிரியர்: தினமணி கதிர், ஆசிரியர்: ரத்னபாலா) காலமான செய்தியறிந்து சுட்டி வருந்து கிறது. அவரின் குடும்பத்தினருக்கு சுட்டி ஆசிரியர் குழுவின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர் : கு. நாரராயண பாரதி,
வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி : 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

FREE E - BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

ராஜிவ்
எம்.ஜி.ஆர்
கருணாநிதி

என் தங்கை மாலாவிற்கு தாம்பூலம் மாற்றிக் கொண்டு வந்த அம்மாவும் அப்பாவும் கையோடு மாப்பிள்ளையின் கேபினட்சைஸ் போட்டோ ஒன்றை வாங்கி வந்தனர்.

அம்மாவின் கையிலிருந்த, மாப்பிள்ளையின் போட்டோவை வாங்கிப் பார்த்தேன். மாப்பிள்ளையின் முகத்தில் பாலகுமாரன் தனம் தெரிந்தது. அப்பா சொன்னார்:

'டேய் குமார், உன் அம்மா பிரியபடறாள். அதனால இந்த போட்டோவை உடனே பிரேம் பண்ணி கொண்டு வந்து ஹால்லே மாட்டிவிடு!'

கண்ணாடி போட்டுக் கொண்டு வந்தேன். வீட்டில்.கேரம் விளையாடிக் கொண்டிருந்த வாண்டுகள் போட்டோவை பிடுங்கி—பிடுங்கி பார்த்து விட்டு, மாலாவிடம் ஜோக் சொல்லிச் சிரித்தன.

முடிவில் போட்டோ அம்மாவின் கைக்கு வந்தது. அம்மா ஹாலில் இருந்த ஆணியில் அதை மாட்டினாள். அப்போது—

அது நழுவி தரையில் விழுந்து கண்ணாடி சிதறியது. அம்மாவும் மற்றவர்களும் பதறினர்.

அப்பா என்னை தனியே அழைத்து "டேய் குமார்... ஒரு சுபகாரியம் நடக்க இருக்கிற நேரத்துல இதுமாதிரி போட்டோ உடையக் கூடாது என்பாங்க...... அப்படி உடைஞ்சா அது போட்டோவுல இருக்கிறவங்க உயிருக்கு ஏதோ ஆபத்து வரப்போகுதுன்னு அர்த்தம்..." என்று சொல்லி புலம்பினார்.

அதற்கு நான் சொன்னேன்.

"அய்யோ அப்பா ... இந்த கம்ப்யூட்டர் காலத்துலயும் இவ்வளவு பெரிய அசடா இருக்கிங்களே... ஒரு போட்டோ கைதவறி விழுறதுனால அதுல இருக்கிற நபரோட உயிருக்கு ஆபத்துன்னா... இப்ப ராஜிவ் இருக்கார். எம். ஜி. ஆர்., கருணாநிதி இருக்காங்க. அவங்க போட்டோவெல்லாம் தினந்தோறும் எத்தனையோ வீடுகளில் கை தவறி விழுந்து உடைஞ்சிகிட்டுதான் இருக்கு... அதுக்காக அவங்க எல்லாம் செத்தா போய்ட்டாங்க..."

— நாகை பொன்னி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## 'மாண்புமிகு' முதல்வர்

உத்தர பிரதேசத்தில் உள்ள விவசாயிகள் சங்கத் தலைவரை சந்திக்கப் போனார் முதல்வர் வீரபகதூர் சிங். விவசாயிகள் சங்கத் தலைவர் கோட்டை போல் இருந்த ஒரு வீட்டி லிருந்தார். அவர் இருப்பிடத்திற்கு சென்று பேசப்போன முதல்வருக்கு உட்கார நாற்காலி கூட தரப்படவில்லை.

தலைவர், "தேவிலால் போன்று கடன் களை ரத்து செய்வீரா?" என்று கிண்டலாக கேட்டிருக்கிறார்.

"மந்திரிசபையை கூட்டி முடிவு செய்வேன்..." என்று முதல்வர் பதில் கூற, சுற்றியிருந்த எல்லோரும் 'ஓகோ' என்று கெக்கெலி கொட்டி ஏளனம் செய்து அனுப்பியிருக்கின்றனர்!

## அந்த 5 நாட்கள்

டெல்லி உச்ச நீதி மன்றத்தில் தலைமை நீதிபதியாக திரு. அகர்வால் பதவி ஏற்றார்! இதில் என்ன விசேஷம் என்றால் அவர் பதவி ஏற்றது AUG-16 ம் தேதி. ரிடையராகும் நாள் AUG-20 ம் தேதி. 5 நாட்கள்தான் அவர் பதவியில் இருக்கிறார். ஓய்வு பெறும் நீதிபதி களுக்கு தரப்படும் அத்தனை சலுகைகளும் இவருக்கு உண்டு.

## மக்கான் கோஸ்ட்

பாகிஸ்தான் மக்கான் கோஸ்ட் என்ற இடத்தை அமெரிக்காவிற்கு தாரைவார்த்துக் கொடுத்துவிட்டது. இப்போது பாகிஸ்தானியர் அந்தப்பக்கம் போவதற்கு அமெரிக்காவின் விஷேச அனுமதி வேண்டும்.

**ராஜசேகர்**

FREE E - BOOKS , www.thamizham.net.,

# தெருவோரங்கள்

எங்கள் ஊரிலுள்ள இரட்டைப் பிள்ளையார் கோயிலின் முன்னால் இருக்கும் பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்துக் கொண்டிருந்தேன்.

கோயிலருகே ஒரு கார் வந்து நின்றது. உள்ளேயிருந்த ஆண்களும் பெண்களும் நாகரிகத்தின் உச்சியில் இருப்பவர்களாகக் காட்சியளித்தார்கள். காரிலிருந்து ஒருவர் கையில் தேங்காயுடன் இறங்கினார். பிள்ளையாரை வணங்கினார். ஓங்கிக் கல்லில் அடித்தார். ஆண்டவனின் பிரசாதம் தெருவெங்கும் சிதற, கார் மீண்டும் கிளம்பிச் சென்றது.

தேங்காய் பொறுக்குவது அநாகரீகம், கேவலம் என்பதாலோ என்னவோ பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த நாங்கள் யாரும் நகரக்கூட இல்லை!

ஆனால் இதற்கென்றே தயாராய் இருந்த எம் தேச ஏழை இளைய பாரதங்கள் மண்ணில் முட்டி, மோதி, புரண்டு எழுந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு துண்டு சிறுநீர் கழித்திருந்த ஈர மண்ணில் விழுந்து கிடந்தது. ஒரு சிறுவன் ஆவலோடு ஓடிச் சென்று அதை எடுத்து 'அந்த' ஈர மண்ணைத் துடைத்துக் கொண்டிருந்தான். 'டேய்... டேய் தேங்காய் எடுக்கலடா, எனக்கு கொஞ்சம் குடுறா...'

— முகம் **பூங்கனியன்**


**மாதம் ரூ. 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாசிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சிகரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

**மலர்ச்சி நிதி** — AP 638, அண்ணா நகர், சென்னை-600 040 — Advt.


FREE E - BOOKS , www.thamizham.net.,

# சிலை வணக்கம்

தென் அமெரிக்க நாடுகளான வெனிசுவேலா, பெரு, பொலிவியா, கொலம்பியா ஆகிய நாடுகளை ஸ்பெயினின் ஆதிக்கத்திலிருந்து விடுவித்த வீரர் சைமன் பொலிவர்.

இவர் வெனிசுவேலாவில் பிறந்தார். அந்நாட்டின் மக்கள் தமது ஒப்பற்றத் தலைவருக்கு சிலை எழுப்ப தன் விருப்பத்தை தெரிவித்தனர். அதற்கு பொலிவர், "கொஞ்சம் பொறுத்திருங்கள். எனது இறப்பிற்குப் பிறகு நடுவு நிலைமையோடு என்னை விமர்சியுங்கள். ஒரு மனிதனின் வாழ்நாளில் அவனுக்கு நினைவுச் சின்னம் எழுப்பக்கூடாது அம்மனிதன் மாறலாம். துரோகியாகலாம். எனவே பொறுத்திருங்கள்..." என்றார்.

தான் உருவாக்கிய குடியரசுகள் தன் கண்ணெதிரேயே சர்வாதிகார அரசுகளாக மாறியது கண்டு மனம் நொந்து தனது 47 வது வயதிலேயே கிழவனாகி, நோய்வாய்ப்பட்டு, தன்னந்தனியாக, சல்லிக்காசு கூட இல்லாமல் 1830 டிச 17ம் நாள் உயிர்நீத்தார்.

வெனிசுவேலா மக்கள் அவர் கேட்டுக் கொண்டபடி விமர்சித்தனர். அவர் இறந்து 12 ஆண்டுகள் கழித்து சாந்தா மார்த்தா தீவில் அவரால் உருவாக்கப்பட்ட கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க, முழுராணுவமரியாதையுடன் நினைவுச்சின்னம் எழுப்பப்பட்டு விட்டது.

சிலை வணக்கத்திற்கு பெயர் போன நம்மவர்களுக்கு சைமன் பொலிவரின் வரலாறு உரைக்கக் குட்டுமா?

— ரேவதி

'சுட்டி' வருட சந்தா ரூ. 10-00

ஆயுள் சந்தா ரூ. 150-00

FREE E - BOOKS , www.thamizham.net.,

நீ தமிழ் மகனா? கவிதை தொகுப்பு (6-50) ப. எழில்வாணன் — தமிழ்வாணன் பதிப்பகம், பள்ளபட்டி-639205, (கரூர் வட்டம்)

**சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் பிளீனம் கூட்டம்** :— வெளியீடு: சோவியத் நாடு பிரசுரங்கள், 115, தியாகராயர் சாலை, சென்னை-600017

விலை:- குறிப்பிடப்படவில்லை.

**டாக்டர் எட்வர்டு பாட்ச் மலர் மருந்துகள்** —அறிமுக வெளியீடு—(3.00) வெளியிடுவோர் :- Dr. V. கிருஷ்ணமூர்த்தி, 22, நாலாவது ட்ரஸ்ட் கிராஸ் தெரு, மந்தவெளிப் பாக்கம், (அட்மிரால்டி ஹோட்டல் பின்புறம்) சென்னை-600028

# எமக்கு வந்தவை

**சினிபஸ்** [திரைப்பட புதுமுக அறிமுக மாத இதழ்] ஆசிரியர்: கவிஞர் இராஜ்காந்தன் — முகவரி: 79, பாரதிநகர், 2-வது தெரு, வில்லிவாக்கம், சென்னை-600049. தனி இதழ் விலை ரூ. 1-00 ஆண்டு சந்தா ரூ. 15 ஆயுள் சந்தா ரூ. 200.

**நீதிமதி**:- மாத இதழ்—ஆசிரியர் / வெளியிடுபவர் எம். ஐ. ஷாஹீல் ஹமீத் 38, மேலத் தெரு, லால்பேட்டை-608303 தனி இதழ் விலை: ரூ 1-00

---

'சுட்டி' மற்றும் இதர பத்திரிகைகளில் முற்போக்கு கருத்துகளை மையமாக வைத்து புரட்சிகரமாக கதைக் கட்டுரைகளை எழுதும் அரசு மணிமேகலை, தங்களது நியாயமானக் கோரிக்கைகளை நிறைவேற்ற நாடு தழுவிய தார்மீகப் போராட்டம் நடத்தும் பல்கலைக் கழக கல்லூரி ஆசிரியர்களை கேலி செய்வது மட்டுமின்றி கோழைத்தனமாக கல்லூரி சென்று கூலிக்கு மாரடிக்கிறார். இதுபோன்ற இரட்டைவேடம் போடும் போலிகளை இனங் கண்டு கொண்டு, இதுகளின் கதை கட்டுரை களை வெளியிடாமல் முற்போக்கு பத்திரிக்கை தர்மத்தைப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். — கார்த்திக், சென்னை-20

---

FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS(N)/317

## இலக்கிய பரிசுகள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் . . . ?

எந்த இலக்கியப் பரிசும், பரிசளிக்கும் நிறுவனத்துக்கும் அதனைப் பெற்றுக்கொள்ளும் எழுத்தாளனுக்கும் இடையிலான ரகசிய ஒப்பந்தமல்ல. அது ஒரு சமூகச் செயல். ஒரு எழுத்தாளன் புதையல் தோண்டி கட்டித் தங்கம் எடுக்கலாம். அரியானா குலுக்கலில் பத்து லட்சம் தட்டிக்கொண்டு போகலாம். இவற்றுக்கும் பரிசு பெறுவதற்கும் வித்தியாசமுண்டு. (நமது தமிழ் தினசரிகள் போடும் தலைப்புகளில் லாட்டரிப்பரிசும் இலக்கியத் தேர்வும் ஒன்றாகவே இருக்கின்றன.) இலக்கியத்ர் தேவுகளில் எழுத்தாளன் பரிசு பெறும் போது பரிசுத் தொகை ஒரு குறியீடு. நம் முன்னுள்ள பிரச்சினை 'அதிருஷ்டம்' அல்ல அந்தக் குறியீடுகள் உணர்த்தும் மதிப்பீடுகள் போற்றத் தகுந்தவையா என்பதாகும்.

## வாழ்வின் இறுதிகாலத்தில் என்ன சொல்லிக்கொள்வதை விரும்புகிறீர்கள் ... ?

''என்னுடைய கலைத்திறன் மிகச் சொற்பமானதுதான். எனினும் அந்தச் சொற்பமான கலை உணர்வையும் நான் பேணிச் சீராட்டி வளர்த்தேன். எனது அந்தரங்கத்துக்கு உவப்பான விஷயத்தையே நான் அளித்தேன். மூன்று வார்த்தைகளில் சொல்லக் கூடியதை நாலு வார்த்தைகளில் சொல்லலாகாது என்ற நீதியைக் கடைசிவரையிலும் நான் காப்பாற்ற முயன்றேன். எனக்குக் கிடைத்த பாஷையை மலினப்படுத்தாமல் மறு சந்ததிக்கு அளிக்க [illegible]ும் என்னால ஆன முயற்சி எடுத்துக் கொண்டேன்.''

சுந்தர ராமசாமி

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழம்
FREE E - BOOKS , www.thamizham.net.,